# <u>RECORD OF DEPOSITION OF WITNESS</u>

## IN THE COURT OF DISTRICT MUNSIF UTHANGARAI
## KRISHNAGIRI DISTRICT

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Case No.** | : | O.S.No. 2/2021 | **CNR No.** | : | TNKI130-00111-2020 |
| **Name** | : | ஜெயராமன் | **Father's Name** | : | திருவேங்கடம் |
| **Witness for** | : | Plaintiff | **Calling** | : | PW4 |
| **Age** | : | 70 | **Village** | : | கீழ்மத்தூர் |
| **Taluk** | : | ஊத்தங்கரை | **District** | : | கிருஷ்ணகிரி |
| **Start Time** | : | 12:15 PM | **End Time** | : | 1:25 PM |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on 03.09.2024 administered by Thiru. G. Amar Anand, B.A.LL.B (Hons), LL.M, District Munsif, Uthangarai.

<u>பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை:</u>

(1) நான் எனது மகன் உடன் தான் குடியிருந்து வருகிறேன் என்றால் ஆமாம். எனது மகன் வாதி குடியிருக்கும் வீட்டின் கதவு எண் என்னவென்றால் 72 ஆகும். வீடு இருக்கும் நிலத்தின் சர்வே எண் என்னவென்றால் **சர்வே எண். 13/4 பி** ஆகும். மேற்படி வீட்டை யார் கட்டினார் என்றால் நான் தான் 2007 ல் கட்டினேன். என்ன வீடு என்றால் மோல்டிங் வீடு ஆகும். என்ன அளவு என்றால் 22 க்கு 27 ஆகும். **சர்வே எண் 13/4 பி** சொத்து ஆதியில் திருவேங்கட கவுண்டருக்கு பாத்தியப்பட்ட சொத்து என்றால் சரிதான். எந்த வருடம் அவர் கிரையம் பெற்றார் என்றால் 1961 ஆகும். யாரிடம் இருந்து கிரையம் வாங்கினார் என்றால் சின்னபையன் என்ற குழந்தை கவுண்டரிடம் வாங்கினார். எத்தனை நபர்கள் சேர்ந்து விற்பனை செய்தார்கள் என்றால் ஒரே நபர் தான். அது என்ன வகையான பத்திரம் என்றால் கிரைய பத்திரம். **சர்வே எண்.13/4 பி**

சொத்து மட்டும் தான் வாங்கினாரா என்றால் இல்லை நிறைய சொத்துக்களை வாங்கினார். நான் சொல்வது போல் வாதியின் தாத்தா சின்னபையன் என்ற குழந்தை கவுண்டரிடம் இருந்து வாங்கவில்லை என்றும் வேறு ஒரு நபரிடம் இருந்து தான் வாங்கினார் என்றால் சரியல்ல. எனது தந்தையாருக்கு எத்தனை பிள்ளைகள் என்றால் ஜெயராமன், குப்புசாமி, மங்கா, அலமேலு, லட்சுமி, ஜெயலட்சுமி, பிருந்தா, மற்றும் கிருஷ்ணன் ஆவார்கள்.

(2) எனது தந்தை உயிருடன் இருக்கும் பொழுது வழக்கு சொத்து **சர்வே எண்.13/4 பி** குறித்து ஏதாவது கிரையமோ, செட்டில்மென்டோ, உயிலோ எழுதி வைத்தாரா என்றால் இல்லை, யூடீஆர் சமயத்தில் மனு கொடுத்து என் பெயரில் பட்டா பெற்றார். எனது தந்தை இறந்த பிறகு எனக்கும் எனது தந்தையின் வாரிசுகளுக்கும் பாகம் ஏதாவது ஏற்பட்டதா என்றால் இல்லை. நான் சொல்லும் பட்டா எண் என்னவென்றால் 510 என் பெயரில் வழங்கப்பட்டது. வாதி பெயரில் எழுதிக்கொடுத்த வா.சா.ஆ.3 ஆவணத்தில் மேற்சொன்ன பட்டா எண் தான் குறிப்பிட்டுதான் தானசெட்டில்மென்ட் எழுதி வைத்தேன் என்றால் ஆமாம்.

(3) எனது முதல் விசாரணையில் சொல்லியுள்ள பட்டா எண் 40ல் என்னனென்ன சர்வே எண் சொத்துக்கள் உள்ளது என்றால் பட்டா எண் 40ல் உள்ள சொத்துக்கள் எதுவும் என்னிடம் இல்லை. எனது முதல்விசாரணையில் சொல்லியுள்ள 2ம் இன சொத்து பட்டா எண் 40ல் இல்லை என்றும் பட்டா எண் 510 இல்லை என்று சொன்னால் சரியல்ல, 510ல் தான் உள்ளது. 2016 வாதிக்கு தானசெட்டில்மென்ட் எழுதி கொடுத்த வா.சா.ஆ 3ல் உள்ள நிலத்தின் செக்குபந்தி விவரம்

என்னவென்றால் தெற்கில் முனியன் நிலம் மற்றும் பெரியதாய் அம்மாள் நிலம், கமலநாதன் நிலம் , கிழக்கில் கமலநாதன் நிலம், வடக்கு புஷ்பா, கொளந்தையம்மாள், தாத்தா கவுண்டர் நிலம், மேற்கு மாணிக்கம் நிலம் ஆகும். மேற்படி செக்குபந்திகளை தான் வா.சா.ஆ.3 ஆவணத்தில் சொல்லியுள்ளேனா என்றால் ஆமாம். கொளந்தையம்மாள், தாத்தா கவுண்டர், மாணிக்கம், பெரியதாய் ஆகியோர்கள் 2016 ல் உயிருடன் இருந்தார்களா என்றால் இருந்தார்கள். எனக்கு எழுதப்படிக்க தெரியுமா என்றால் தெரியும்.

(4) வா.சா.ஆ. 3 காண்பிக்கப்பட்டு, கமலநாதன் தந்தை பெயர் தெரியுமா என்றால் தெரியாது. கமலநாதன் உடன் பிறந்தவர்கள் யார் என்றால் அவரது சகோதரர்கள் பன்னீர் மற்றும் நாராயணன் ஆவார். 2ம் இன சொத்திற்கு தெற்கிலும், கிழக்கிலும் உள்ள சொத்தை கமலநாதன், பன்னீர் மற்றும் நாராயணன் சம்பாரிக்கவில்லை என்றும் அவர் மூதாதையர் சொத்து என்றால் சரிதான். மேற்படி சொத்தை பன்னீர், நாராணயன், கமலநாதன் ஆகியோர்கள் பாகம் பிரித்து அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரிதான்.

(5) வழக்கு சொத்திற்கு கிழக்கில் உள்ள பன்னீர், நாராணயன், கமலநாதன் சொத்தின் சர்வே எண் தெரியுமா என்றால் தெரியாது. கிழக்கு பக்கம் உள்ள சொத்தில் பன்னீர், நாராணயன், கமலநாதன் அவர் அவர் எவ்வளவு சொத்து அனுபவித்து வருகிறார்கள் என்றால் தெரியாது. 2ம் இன வழக்கு சொத்திற்கு எந்த திசையில் பன்னீர் நிலம் உள்ளது என்றால் தெற்கில் உள்ளது. 2ம் இன சொத்திற்கு கிழக்கிலும் பன்னீர் என்பவருக்கு பாகம் ஒதுப்பட்டது என்றால் சரிதான். எனக்கும் பன்னீர் என்பவருக்கும் 29.04.2020 ம் தேதி வழிப் பிரச்சனை ஏற்பட்டதா என்றால் வரப்பு

சம்பந்தமாக ஏற்பட்டது. நான் சிங்காரபேட்டை காவல் நிலையத்தில் நான் கொடுத்த புகாரின் பேரில் 11.07.2020 ம் தேதி பன்னீர், மற்றும் அவரது குடும்பத்தார் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டதா என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும், முதல் தகவல் அறிக்கை இது தான் என்றால் சரிதான். **(11.07.2020 தேதியிட்ட சிங்காரபேட்டை காவல் நிலைய குற்ற எண்.815/2020 முதல் தகவல் அறிக்கை – பதிவிறக்க நகல் – பி.வா.ஆ. 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** மேற்படி புகாரில் பொது வழி பிரச்சனை சம்பந்தமாக 3 மாதங்களாக பஞ்சாயத்து நடந்தது என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி பஞ்சாயத்தில் வழி பிரச்சனை சம்பந்தமாக தீர்வு ஏற்பட்டதா என்றால் இல்லை.

(6) தண்ணீர் எடுத்து சென்று விவசாயத்திற்கு, வீட்டு பயன்பாட்டிற்கும் விற்பனை செய்வதற்கு ஏதாவது உரிமை வாங்கியுள்ளேனா என்றால் இல்லை. எனது மகன் வாதி வெங்கடேசன் அதே போன்று உரிமம் ஏதாவது வாங்கியுள்ளேனா என்றால் இல்லை. வாதி தண்ணீர் எடுத்து செல்லும் டிராக்டர் மற்றும் டைலர் யார் பெயரில் உள்ளது என்றால் எனது பெயரில் உள்ளது, அது வாங்கி சுமார் 20 வருடங்கள் ஆகிறது.

(7) எங்களது நிலமும் பிரதிவாதிகள் நிலமும் எத்தனை அடி உயரமாக உள்ளது என்றால் பிரதிவாதிகள் நிலம் 2 அடி உயரமாக உள்ளது. நான் தான் கிருஷ்ணகிரியில் ஆட்சியர் அலுவலகத்தில் எப்எம்பி, அடங்கல், சிட்டா, அ பதிவேடு, எஸ்எல் ஆர் கோரி மனு செய்தேன் என்றால் சரிதான். அனைத்து ஆவணங்களும் வழங்கப்பட்டதா என்றால் இல்லை, புல வரைபடம் மட்டும் வழங்கப்பட்டது. அவர்கள் வழங்கிய சர்வே எண் 13 க்கான புல வரைபடத்தில் **சர்வே எண் 13/4 ஏ, சர்வே எண்.13/4 பி** என்று

உட்பிரிவு ஆகி உள்ளது என்றால் சரிதான். **சர்வே எண். 13/4 ஏ** நிலம் யாருடையது என்றால் கொளந்தையம்மாள் உடையதாகும். **சர்வே எண் 13/4 பி** யாருடையது என்றால் என்னுடையதாகும். **சர்வே எண் 13/4 பி** யில் யார் சுவாதினத்தில் உள்ளார் என்றால் எனது மகனுக்கு கொடுத்துவிட்டதால் அவர் சுவாதினத்தில் உள்ளார். எனது மகனுக்கு எழுதிய செட்டில்மென்ட் பத்திரத்தில் வீடு எதுவும் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். ஆட்சியர் அலுவலகத்தில் சர்வே எண் 125 க்கான புல வரைபடம் வா.சா.ஆ. 9 என்றால் சரிதான். வா.சா.ஆ.9 ல் **புல எண் 125/4** ல் எத்தனை உட்பிரிவுகள் காட்டப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது. **சர்வே எண். 125/4** ல் வழிக்காக உட்பிரிவு செய்யப்பட்டுள்ளதா என்றால் ஆட்சியர் அலுவலகத்தில் மனு செய்து பெற்ற பிறகு தான் உட்பிரிவு ஆகியுள்ள விவரம் தெரியும். வழக்கு தாக்கல் செய்த பிறகு ஆட்சியர் அலுவலகத்தில் இருந்து ஆவணம் வாங்கிய பிறகு தான் வழி இருப்பது தெரியும்.

(8) வழிக்காக உட்பிரிவு செய்யப்பட்ட உட்பிரிவு என்னவென்றால் சர்வே எண்.124/டி ஆகும். நான் மேற்படி ஆவணங்களை பெறுவதற்கு செல்லும் போது வாதி உடன் வந்தாரா என்றால் இல்லை. வா.சா.ஆ.9 ல் காட்டப்பட்டுள்ள வழி அளவு என்னவென்றால் 3.2 மீட்டர் ஆகும். நீளம் எவ்வளவு என்றால் சுமார் 150 மீட்டர் ஆகும். 3.2 மீட்டர் என்று எவ்வாறு சொல்கிறேன் என்றால் தோராயமாக தான் அளவு சொல்கிறேன், அளந்து பார்த்தா தான் தெரியும். வாதி எத்தனை அடி பாதை உள்ளது என்று வழக்கில் சொல்லியுள்ளார் என்றால் 12 அடி இருப்பதாக தாக்கல் செய்துள்ளார்.

(9) பிரதிவாதிகளின் நிலத்தில் உள்ள கிணறு எங்களது நிலத்திற்கு எந்த திசையில் உள்ளது என்றால் தெற்கு திசையில் 5 மீட்டர் தொலைவில் உள்ளது. மேற்படி கிணறு எவ்வளவு ஆழம் இருக்கும் என்றால் 45 அடி அளவு இருக்கும். எப்போது கிணறு வெட்டினார்கள் என்றால் சுமார் 20 வருடங்களுக்கு மேல் இருக்கும். கிணறு வெட்டிய மண்ணை வடக்கு பக்கத்திலும் மேற்கு பக்கத்திலும் கொட்டி வைத்துள்ளார்கள் என்றால் சரிதான். மண்ணை தான்டி எனது நிலத்திற்கு போக முடியாது என்றால் சரியல்ல, சென்று  வந்திருந்தோம். வடக்கிலும் மேற்கிலும் உள்ள மண் குவியல் எவ்வளவு உயரம் இருக்கும் என்றால் சுமார் 5 அடி உயரம் இருக்கும். பிரதிவாதிகளின் ஆழ்துளை கிணறு எங்கு உள்ளது என்றால் தெரியாது,  2 உள்ளது. ஆழ்துளை கிணறு எப்போது போட்டார்கள் என்றால் சுமார் 5 வருடங்களுக்கு முன்பு போட்டார்கள். வா.சா.ஆ.7, 8, 9 ஆவணங்கள் வழக்கிற்காக நாங்களே தயார் செய்து தாக்கல் செய்துள்ளோம் என்று சொன்னால் சரியல்ல. பன்னீர் சொத்திற்கு கிழக்கு பக்கத்தில் செல்லும் மண் ரோடு எவ்வாறு செல்கிறது என்றால் வடக்கு தெற்காக செல்கிறது. மேற்படி மண் சாலை எங்கு சென்று சேர்கிறது என்றால் வடக்கு பக்கம் செல்லும் தார் சாலையில் சென்று சேர்கிறது. மேற்படி தார்சாலை உள்ள முருகன் வீடு உள்ளதா என்றால் இல்லை, மண் சாலையை ஒட்டியே உள்ளது.

(10) எங்களது வீட்டில் இருந்து கிழக்கு பக்கத்தில் எங்களது நிலத்திற்கு மண் சாலை அமைத்துள்ளோம் என்றால் சரிதான். நாங்கள் எந்த காலத்திலும் 1 இன சொத்தின் வழியாக சென்றதில்லை என்றும் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால்

சரியல்ல.  நாங்கள் பன்னீர் என்பவர் நிலத்தின் வழியாக தான் சென்று வந்து கொண்டிருந்தோம் என்றும் அவருடன் பிரச்சனை ஏற்பட்டதால் பிரதிவாதிகள் மீது இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதிகள் வெளியூரில் இருந்து வருகிறார்கள் என்றால் சரியல்ல, 3ம் பிரதிவாதி தான் வெளியூரில் இருக்கிறார். பிரதிவாதிகள் நிலத்தில் எந்த காலத்திலும் வழி இல்லை என்றும் அவ்வாறு இருந்திருந்தால் 2016 தானசெட்டில் மெண்ட் பத்திரத்தில் குறிப்பிட்டிருப்பேன் என்று சொன்னால் எங்களுக்கு அப்போது தெரியாது, மற்றவர் வழியை எழுத வேண்டாம் என்று எழுதவில்லை, ஆட்சியர் அலுவலகத்தில் ஆவணம் பெற்ற பிறகு தான் வழிக்காக உட்பிரிவு ஆகியுள்ள விவரம் தெரியும். வழிக்காக உட்பிரிவு ஆகியுள்ள பகுதிக்கும் பிரதிவாதிகளுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரிதான், ஆனால் எங்களுக்கு பாத்தியம் உண்டு. தவறான வழக்குமூலம் கொண்டு வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும் 2016 பத்திரத்தின் செக்குபந்தி மற்றும் பட்டா விவரங்கள் தவறாக குறிப்பிட்டுள்ளது என்றும் வீடு இருப்பதை மறைத்து  பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல, வீடு மட்டும் தான் எழுதவில்லை. செக்குபந்தி விவரம் சரியாக தான் உள்ளது. நான் இந்த வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றும் வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

**<u>குறுக்கு விசாரணை முடிவுற்றது.</u>**

Taken down by me in open Court, read over to the witness and acknowledged by him / her to be correct.

G AMAR ANAND

District Munsif
Digitally signed by G AMAR ANAND
Location: Uthangarai

District Munsif
Uthangarai